பக்கங்கள்: நான்கு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 4-50

சுடர்: 6 திருவள்ளுவர் ஆண்டு 2022 ஆனி மீ 29 உ சனிக்கிழமை (13-07-1991) UTHAYAN — A Lively National Tamil Daily கதிர்: 220

# ஆனையிறவில் மோதல்
# 3 ஆம் நாளாக உக்கிரம்

## தடைமுகாம் காவல் தளத்தை வீழ்த்துவதற்கு தொடர்ந்து முயற்சி

யாழ்ப்பாணம், ஜூலை 13

ஆனையிறவு இராணுவ முகாமைச் சூழவுள்ள பகுதியில் நேற்று மூன்றாம் நாளாக உக்கிரப் போர் நடைபெற்றது.

உப்பளப் பக்கமாக (பரந்தன் பக்கமாக) உள்ள ஸ்ரீலங்கா இராணுவத்தின் காவல் தளத்தை வீழ்த்திய விடுதலைப் புலிகள் வடக்குப் புறத்தில் (குறிஞ்சாத்தீவுப் பக்கமாக) உள்ள தடைமுகாம் காவல் தளத்தை நெருங்கித் தகர்க்க தொடர்ந்து முழு முனைப்புடன் முயன்று வருவதாகத் தெரியவருகிறது.

மிக நெருக்கமாக மிதிவெடிகள் புதைக்கப்பட்டிருக்கும் நிலப் பகுதி ஊடாக குறிஞ்சாத்தீவுப் பக்கத்தில் (தடைமுகாம் பக்கமாக) உள்ள காவல் தளத்தை நோக்கி புலிகள் அங்குலம் அங்குலமாக முன்னேறிக் கொண்டிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது.

ஆனையிறவு முகாம்மீதான முதல் தாக்குதலை புதன் இரவு 10 மணிக்கு விடுதலைப் புலிகள் ஆரம்பித்தனர்.

முதல் இரு மணி நேரச் சண்டையிலேயே பரந்தன் பக்கமாக இருந்த உல்லாச விடுதி காவல் தளம் புலிகள் வசம் வீழ்ந்தது தெரிந்ததே.

அந்தப் பகுதி தொடர்ந்து புலிகளின் கட்டுப்பாட்டிலேயே இருந்து வருகிறது.

நேற்று முன்தினம் [வியா

[3 ஆம் பக்கம் பார்க்க]

### 110 பேர் இரத்ததானம்

யாழ்ப்பாணம், ஜூலை 13

யாழ். போதனாவைத்திய சாலை இரத்தவங்கியில் நேற்று பொதுமக்கள் 110 பேர் இரத்ததானம் வழங்கினர்.

இந்தளவு எண்ணிக்கையான மக்கள் வரிசையில் காத்து நின்று இரத்தம் வழங்கியது இதுவே முதற்தடவையாகும்.

நேற்று முன்தினமும் பலர் இரத்ததானம் வழங்கியிருந்தனர் என்பது தெரிந்ததே.

## காயமுற்ற 30 சிப்பாய்கள் முகாமுக்குள் சிக்கியுள்ளனர்

கொழும்பு, ஜூலை 13

கடும் சண்டை நடைபெற்று வரும் ஆனையிறவு இராணுவ முகாமுக்குள் 30 இற்கும் அதிகமான சிப்பாய்கள் படுகாயமடைந்து மீட்கப்படமுடியாத நிலையில் சிக்கியுள்ளனர்.

ஸ்ரீலங்கா இராணுவ வட்டாரங்களை மேற்கோள் காட்டி, ஏஜென்ஸிச் செய்திகள் இத்தகவலை வெளியிட்டன.

படுகாயமடைந்து, சிகிச்சைக்காக எடுத்துச் செல்லப்பட முடியாத நிலையில் இருக்கும் படையினரின் எண்ணிக்கை உண்மையில் இதைவிடக் கூடுதலாக இருக்கும் என்று கருதப்படுகிறது.

இராணுவ முகாமுக்குள் ஹெலிக்கொப்டர்கள் இறங்க முடியாத வகையில் விடுதலைப்புலிகள் முகாமை நெருக்

[4 ஆம் பக்கம் பார்க்க]

## பாதுகாப்பாக இருந்தவாறு புலிகள் தாக்குகின்றனர்!

ஆனையிறவு இராணுவ முகாமைச் சூழ பதுங்கு குழிகளை அமைத்து, அதற்குள் பாதுகாப்பாக இருந்து கொண்டு, முகாமை விடுதலைப் புலிகள் தாக்கிவருகின்றனர்.

பதுங்கு குழிகளுக்குள் இருப்பதால் விடுதலைப் புலிகள் ஸ்ரீலங்கா விமானப்படையின் வான் தாக்குதலை இலகுவாகச் சமாளிப்பதாகத் தெரிகிறது.

—இவ்வாறு ஸ்ரீலங்கா இராணுவ வட்டாரங்களை மேற்கோள் காட்டி ஏஜென்ஸிச் செய்திகள் தெரிவித்தன.

வடமாகாணம் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் இருப்பதால் முகாம் மீது தாக்குதல் நடத்துவது புலிகளுக்கு எளிதாக இருப்பதாக கொழும்புச் செய்தியாளர்கள் தெரிவித்தனர். (உ-எ)

## மேலும் 6 படையினர் பலி

கொழும்பு, ஜூலை 13

ஆனையிறவு முகாம் மீது நேற்று மீண்டும் விடுதலைப் புலிகள் நடத்திய கடுமையான தாக்குதலில் 6 படையினர் உயிரிழந்தனர் என்று கொழும்பில் பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

நேற்று முன்தினம் நடந்த தாக்குதலிலும் மேஜர் உட்பட 4 படையினர் கொல்லப்பட்டனர் என்று ஸ்ரீலங்காப் படை வட்டாரங்கள் கூறியிருந்தன என்பது தெரிந்ததே.

## குடாநாடெங்கும் சோகம்

யாழ்ப்பாணம், ஜூலை 13

ஆனையிறவு போர்க் களத்தில் உயிர் நீத்த போராளிகளுக்கு அஞ்சலி செலுத்தும் வகையில் குடாநாட்டில் துக்கம் அனுஷ்டிக்கப்பட்டு வருகிறது.

அனேக வீதிகளில் வாழைகள், தோரணங்கள் கட்டப்பட்டுள்ளன. முக்கிய இடங்களில் சோக கீதங்கள் ஒலிபரப்பப்படுகின்றன.

போராளிகளின் புகழுடல்களுக்கு அவ்வப் பகுதிகளில் கூடும் மக்கள் தமது இதயபூர்வமான அஞ்சலிகளைச் செலுத்தி வருகின்றனர். [ஒ-3]

## மக்கள் இடம்பெயர்வு

தாளையடி, ஜூலை 13

உக்கிர மோதல்களினால் ஆனையிறவுப் பகுதி தொடர்ந்து அதிர்ந்து கொண்டிருப்பதால் அப்பகுதியை அண்டி வடமராட்சி கிழக்கில் இருந்த மக்கள் பாதுகாப்புத் தேடி வேறு இடங்களுக்கு தற்காலிகமாக இடம் பெயர்ந்திருக்கின்றனர்.

போக்கறுப்பு, முள்ளியான், வெற்றிலைக்கேணி, ஆழியவளை, உடுத்துறை, வத்திராயன், மருதங்கேணி ஆகிய கிராமசேவையாளர் பிரிவுகளில் உள்ள மக்களே இடம் பெயர்ந்து செம்பியன்பற்று, மாமுனை, நாகர்கோவில், அம்பன், குடத்தனை, பருத்தித்துறை, பொலிகண்டி ஆகிய இடங்களுக்குச் சென்றுள்ளனர். (உ-144]

## வீடுகள், கட்டடங்கள் சேதம்

தாளையடி, ஜூலை 13

ஆனையிறவு முகாமை அண்டியுள்ள பகுதிகளில் ஸ்ரீலங்காவிமானப்படை நடத்திவரும் கண்மூடித்தனமான குண்டுவீச்சுத்தாக்குதலில் பல வீடுகள், கட்டடங்கள் சேதமடைந்துள்ளன.

கோயில்வயல், சங்கத்தார் வயல் பகுதிகளிலேயே கூடுதலான சேதங்கள் ஏற்பட்டன இப்பகுதிகளிலிருந்து ஏற்கனவே மக்கள் இடம்பெயர்ந்திருந்ததால் பொதுமக்களுக்கு உயிராபத்து ஏதும் ஏற்படவில்லை. [உ-144]

## கிளிநொச்சி நகரில் நேற்று பொம்மர் குண்டு வீச்சு!

யாழ்ப்பாணம், ஜூலை 13

கிளிநொச்சி நகரப் பகுதியில் நேற்று நண்பகல் 12 மணியளவில் பொம்மர் குண்டு வீச்சுக்கள் இடம்பெற்றன.

ரயில் நிலையத்துக்கு முன்னால் உள்ள சந்தைப் பகுதியை நோக்கியும் கந்தசாமி கோயிலுக்குச் சமீபமாக கணேசபுரம் பக்கமாகவும் குண்டுகள் வீசப்பட்டன.

நேற்றைய குண்டு வீச்சில் பொது மக்கள் இருவர் காயமடைந்தனர். இருவரும் கிளிநொச்சி ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டுள்ளனர். அவர்களது பெயர், விவரங்கள் கிடைக்கவில்லை.

இதே வேளை—

ஆனையிறவு இராணுவத்தினரின் ஷெல்கள் கிளிநொச்சிப் பகுதியிலும் விழுந்து வெடித்தன,

கிளிநொச்சி ஆஸ்பத்திரிக்குச் சமீபமாக விழுந்த ஷெல்லினால் கடைக் கட்டடங்கள் சில சேதமடைந்தன. (ஒ-15)

### தமிழர்கள் 10 பேர் கைது

யாழ்ப்பாணம், ஜூலை 13

திருகோணமலை மாவட்டம் பள்ளிக்குடியிருப்பில் கடந்த செவ்வாயன்று ஆசிரியர்கள், மாணவர்கள் உட்பட 10 தமிழர்களை இராணுவத்தினர் கைது செய்தனர்.

மூன்று ஆசிரியர்கள், ஐந்து மாணவர்கள், இரு விவசாயிகள் ஆகியோரே கைது செய்யப்பட்டனர். (ஒ-5)

### முச்சந்தி முரளி



தானத்தில் சிறந்த தானம் உயிர் கொடுக்கும் இரத்த தானம் கண்டியளோ......!

## புதனன்று 25 பேர் களப்பலியாகினர்!

ஆனையிறவு முகாமின் உப்பள உல்லாச விடுதி காவல் தளத்தை கடந்த புதனிரவு கைப்பற்றிய வீரச் செயலின் போது பெண் போராளிகள் உட்பட 25 வேங்கைகள் களப் பலியானார்கள்.

இந்த காவல் தளத்தை விடுதலைப் புலிகள் தொடர்ந்து தமது கட்டுப்பாட்டில் வைத்திருக்கின்றனர்.

காவல்தளத்தை புலிகள் கைப்பற்றிய பின்னர், ஆனையிறவு பிரதான முகாமிலிருந்து இந்த காவல் தளத்தை நோக்கி படையினர் நடத்திய சினைப்பர் தாக்குதலில் மற்றொரு விடுதலை வேங்கை வீரமரணம் அடைந்தார். (உ)

## மீட்கப்பட்ட ஆயுதங்கள்

யாழ்ப்பாணம், ஜூலை 13

கடந்த புதன் இரவு ஆனையிறவு இராணுவ முகாம் மீது விடுதலைப் புலிகள் நடத்திய தாக்குதலின்போது, பரந்தன் பக்கமாக இருந்த உப்பள உல்லாச விடுதி காவல் தளம் விடுதலைப் புலிகள் வசம் வீழ்ந்தது தெரிந்ததே.

இத்தாக்குதலின்போது விடுதலைப் புலிகள் கைப்பற்றிய ஆயுதங்களின் விவரம் வருமாறு:—

★ எம். ஜி-3 ரக ரைபிள் — 01
★ அதற்குரிய மேலதிக சுடுகுழல் — 02
★ அதற்குரிய ஸ்ராண்ட் — 01
★ ஏ. கே. எல். எம். ஜி. ரைபிள் — 02
★ அதற்குரிய ரம் மகஸின் — 18
★ அதற்குரிய லிங் — 440
★ 40 எம். எம். ரி-69 ரக ஆர். பி. ஜி. — 03
★ அதற்குரிய ஷெல் — 70
★ புறொப்லர் — 42
★ 203 பிஸ்டல் — 03
★ 40 எம். எம். ஷெல் — 42

[4 ஆம் பக்கம் பார்க்க]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

### உடன் விற்பனைக்கு

எம்மிடம் புதிய, பழைய சினிமாப்பட வீடியோ கொப்பிகள் மலிவான விலையில் உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: மீரா வீடியோ விஷன், மருதடிப் பிள்ளையார் கோவிலடி, நுணாவில் மேற்கு, விளைவேலி, சாவகச்சேரி. (4195)

### மணமகள் தேவை

38 வயது நிரம்பிய அதிபராக கடமையாற்றும் கிறிஸ்தவ மணமகனுக்கு தொழில் செய்யும் 34 வயதிற்குட்பட்ட, மதப்பற்றும் உள்ள மணமகள் தேவை. முழு அளவிலான வர்ணப் புகைப்படத்துடனும், சாதகக் குறிப்புடனும் விண்ணப்பிக்கவும். தொடர்பு: வி. இல. 330, மே/பா உதயன், யாழ்ப்பாணம். (17411)

### தவறிவிட்டது

கதிரித்தம்பி செல்வராசா, செல்வராசா புவனேஸ்வரி, செல்வராசா குமுதினி என்பவர்களின் அடையாளஅட்டைகளும் வேறு சில ஆவணங்களும் 7 - 7 - 1991 இல் சேரதீவு இறங்குதுறையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து உதயன் காரியாலயத்தில் ஒப்படைக்கவும். (17509)

### துர்க்கா திருமண சேவை

எல்லா மதங்களிலும் திருமண தொடர்பு செய்து கொடுக்கப்படும். ஜாதகம், புகைப்படத்துடன் தொடர்பு கொள்ளவும். எல்லா நாட்களிலும் தொடர்பு கொள்ளலாம். துர்க்கா திருமண சேவை, வளர்மதி இல்லம், கே. கே. எஸ். வீதி, மல்லாகம். (4175)

### வாடகைக்கு

யாழ்ப்பாணம், காங்கேசன்துறை வீதியில் பாதுகாப்பான இடத்தில் கடை வாடகைக்கு உண்டு. வியாபார முதலீடு செய்து வியாபாரம் செய்ய ஆற்றல் உள்ளவர்கள் பங்காளராக சேர்ந்து வியாபாரம் செய்ய விரும்பினால் விண்ணப்பிக்கவும். இல. 331, மே/பா உதயன் யாழ்ப்பாணம். [17432]

### காணவில்லை

பிறேமாவதி முத்தையா என்பவரை 8 - 7 - 91 இல் இருந்து காணவில்லை. இவருக்கு வயது 15, உயரம் 4' - 6'', பொதுநிறம், கடைசியாக இளஞ்சிவப்பு கோடிட்ட சட்டை அணிந்திருந்தார். இவரைக் கண்டவர்கள் தயவு செய்து கீழ்க்கண்ட விலாசத்துடன் தொடர்பு கொள்ளவும். 60/2, டேவிட் வீதி, குருநகர், யாழ்ப்பாணம். (17511)

### விற்பனைக்கு

அல்சேஷன் 40 நாள் நாய்க் குட்டிகள் விற்பனைக்கு உண்டு. பூச்சி நீக்கியது. தொடர்பு: பொ. தில்லைராசா, 3 ஆம் கட்டை, பருத்தித்துறை வீதி, கல்வியங்காடு. [Organ Classes எதிர் வீடு]

[17445]

ஜேர்மன் செப்பேர்ட் இன அல்சேஷன் நாய்க் குட்டிகள் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: கே. எஸ். ஆர். போட்டோ, இல. 12 A, கந்தபுராண வீதி, கந்தர்மடம் யாழ்ப்பாணம்.

(17510)

### ரைப்ரைட்டர் சேவை

தட்டச்சு இயந்திரங்கள் (Typewriters) வாங்கவும், விற்கவும் மற்றும் சிறந்த முறையில் திருத்தவும் தொடர்பு கொள்ளவும்: பியூடோ, 39/17, மின்சார நிலைய வீதி, 3ஆம் ஒழுங்கை, யாழ்ப்பாணம்.

[சி/0194]

## தட்டச்சு (Typing) சுருக்கெழுத்து (Short-Hand) வகுப்புகள்

பிரிவு I வார நாட்களில் காலை 8-30—4-30
பிரிவு II சனி, ஞாயிறு காலை 8-30—4-30

★ பயிற்றப்பட்ட ஆசிரியைகளினால் ஒவ்வொருவருக்கும் தனித்தனியாகவே பயிற்றுவிப்பதனால் எவரும் எந்த நாட்களிலும் பயிற்சிக்கு அனுமதி பெறலாம்.
★ பயிற்சி முடிந்ததும் பயனுள்ள சான்றிதழ் வழங்கப்படும்.
★ Pitman [London] பரீட்சைக்கு எமது நிறுவனத்திலேயே தோற்றலாம்.

**BOND கல்வி நிறுவனம்,**
58 A, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.
[4198]

## முதலாவது பிறந்தநாள் வாழ்த்து

### ★ செல்வன் திவாகர் ★



19/7, கலைப்புலவர் வீதி பெருமாள் கோவிலடியில் வசிக்கும் இலங்கதாஸ் சுதா தம்பதிகளின் செல்வப் புதல்வன் திவாகர் தனது முதலாவது பிறந்த நாளை இன்று [13-7-1991] சனிக்கிழமை தமது இல்லத்தில் வெகு விமர்சையாக கொண்டாடுகிறார்.

அப்பா, அம்மா, தாத்தா, அம்மம்மா, பிரான்ஸில் இருக்கும் மாமன்மார் சுரேஸ் - ரேணுகா அத்தை, றமேஸ், றதீஸ், விஜி சித்தி, குட்டிமாமா மற்றும் உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் புனித அந்தோனியார் அருள் பெற்று சகல கலைகளுடனும், இவர் நீடூழி வாழ்கவென வாழ்த்துகின்றார்கள்.

19/7, கலைப்புலவர் வீதி,
பெருமாள் கோவில்.

[17390]

## ஆண்டு - 5

[புலமைப்பரிசில் போட்டிப் பரீட்சை]

| | பயிற்சிப் பரீட்சை | | இலவச கருத்தரங்கு |
|---|---|---|---|
| 1. | 14-07-91 ஞாயிறு 7-00 | — | 20-07-91 — 8-00 மணி |
| 2. | 21-07-91 ஞாயிறு 7-00 | — | 27-07-91 — 8-00 மணி |
| 3. | 28-07-91 ஞாயிறு 7-00 | — | 30-07-91 — பி.ப 4-00 |

இப்பரீட்சைகளை நடத்த விரும்பும் நிறுவனங்கள், ஆசிரியர்கள், பதிவாளரிடம் நேரடியாக தொடர்பு கொள்ளவும்.

பதிவாளர்
பரீட்சைப்பகுதி
**BOND கல்வி நிறுவனம்,**
58 A, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம். (4197)

## பத்தாம் ஆண்டு நினைவஞ்சலி



### ஸ்ரீதேவன் இரவீந்திரன்

மண்ணின் மடியில்:
8 - 9 - 1962
அண்ணல் அடியில்:
13 - 7 - 1981

நெஞ்சிருக்கும் வரை
நினைந்து நினைந்து
அஞ்சலிப்போம் - எம்
அமுதா ரவீந்திரா
பத்தாம் ஆண்டிலெம்
பாச மலர்களை
வைக்கின்றோம் வாழ்த்தி
வாழி எம் செல்வமே!

அப்பா, அம்மா,
தம்பி, உறவினர்,
நண்பர்கள்.

36/1, செட்டித் தெரு,
நல்லூர்.
[4193]

## 60 ஆம் நாள் நினைவஞ்சலி



அமரர்
### செல்வநாயகம் சிவச்சந்திரன்
[சிவனேசு]

தோற்றம்: 31 - 1 - 1954
மறைவு: 16 - 5 - 1991

ஈழத்தில் உனை ஈன்றெடுத்து ஜேர்மனியில் காலனுக்கு இரையாக்கிவிட்டோம் ஐயா; காலமெல்லாம் எம்மைக் கதறி அழ விட்டுவிட்டு - கனவுபோல் பறந்து விட்டாயோ; மலர்மாலை வாடுவதற்குள் உன் மண வாழ்க்கை முடிந்ததுவோ! கட்டியவளை கதிகலங்க வைத்துவிட்டு கட்டையிலே சாய்ந்து விட்டாயோ; பால்மணம் மாறாத பச்சிளம் பாலகனை பரிதவிக்க விட்டுச் சென்றாயோ; அக்கா, தயா, அண்ணை என அழைக்கும் அன்பு மொழி அணைந்ததுவோ; பற்றுடனே பெற்று பாசமுடன் வளர்த்தெடுத்த உன் அன்னயை மறந்து சென்றாயோ; உன் உருவம் காணாது, உன் குரலைக் கேளாது என்றும் எம் இதயம் உன் முகத்தை நினைத்திருக்கும்.

உமது பரிவால் துயருறும்:
மனைவி, மகள், தாய்,
சகோதரன், சகோதரி குடும்பத்தினரும்,
மாமன்மார் குடும்பத்தினரும்.

ஆனைக்கோட்டை வீதி,
கொக்குவில் மேற்கு. [17506]

யாழ்ப்பாணம்
பல்கலைக்கழகம், இலங்கை

## கேள்விப் பத்திர அறிவித்தல்

**மூன்று புசல் நெல் கொள்ளக்கூடிய 1250 வெற்றுச்சாக்குகளை வழங்குதல்.**

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திற்கு 1250 வெற்றுச்சாக்குகளை உடனடியாக வழங்குவதற்கு முத்திரை இடப்பட்ட கேள்விகள் கோரப்படுகின்றன.

கேள்விகள் பின்வரும் விவரங்களைக் கொண்டதாக யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் பெயருக்கு எழுதப்பட்ட மீளளிக்கப்படாத கேள்விப்பத்திர கட்டணமாக ரூபா 150/- காசுக்கட்டளை/தபாற்கட்டளையுடன் அனுப்பி வைக்கப்படல் வேண்டும். கட்டணம் இன்றி அனுப்பப்படும் கேள்விகள் நிராகரிக்கப்படும்.

பெயர்:
முகவரி:
வெற்றுச்சாக்கின் கொள்ளளவு:
ஒன்றுக்கான விலை:
வழங்கக்கூடிய தொகை

கேள்விகளுக்கு விண்ணப்பிப்போர் கேள்விப்பத்திர தபால் உறையில் இடது பக்க மேல் மூலையில் வெற்றுச்சாக்குகள் வழங்குவதற்கான கேள்விகள் எனக் குறிப்பிட்டு பதிவாளர், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் என்ற முகவரிக்கு 23 - 7 - 91 காலை 10-00 மணிக்கு முன்னதாக கிடைக்கும் படியாக அனுப்பி வைக்கப்படல் வேண்டும். கேள்விகள் 23-7-91 முற்பகல் 10-30 மணிக்குத் திறக்கப்படும்.

— பதிவாளர்.

[சி-0234]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உதயன்

### உணருவது எப்போது?

கிறீஸ் நாட்டில் தஞ்சம் புகுவதற்கெனச் சென்ற இலங்கையர்கள் முப்பத்தொருபேர், துருக்கியில் இறக்கிவிடப்பட்ட சம்பவம் அண்மையில் நிகழ்ந்திருக்கிறது. இவ்வாறு தத்தளிக்க விடப்பட்டவர்கள் பலரும் தமிழர்களே என்று சொல்லப்படுகிறது.

காணி பூமியை விற்று, நகைகள் மற்றும் சொத்துக்களை அடகு வைத்து ஏராளமான ஈழத் தமிழர்கள் வெளிநாடுகளில் தஞ்சம் புகுவதற்கு ஆலாய்ப் பறப்பது சர்வ சாதாரணம். அதுபோலவே, வெளிநாட்டுப் பயண முகவர்களால் ஏமாற்றப்பட்டு அவர்கள் நடுத்தெருவில் தத்தளிப்பதும் அடிக்கடி இடம்பெறும் நிகழ்வாகும்.

மிகக் குறிப்பாக தமிழ் மண்ணில் யுத்தம் தொடங்கிய பின்னர், தங்களுடையது மட்டும் தான் பெறுமதியான உயிர் என நினைத்துக் கொண்டு, கொழும்புக்குப் படை எடுத்தவர்கள் ஆயிரக் கணக்கானோர். இங்கே இருப்பவர்கள் குண்டடி பட்டேனும் சரி, ஷெல்லடி பட்டேனும் சரி சாகட்டும்; நாம் மட்டும் தப்பிப் பிழைத்து விடுவோம் என்று ஓடியவர்கள் அவர்கள். இந்த மண் தாம் பிறந்த சொந்த மண்; வாழ்வும் சாவும் இங்கேயே நிகழ வேண்டும் என்ற மண் பற்று இல்லாதவர்களே அவ்வாறு ஓடினார்கள்!

ஓடியவர்கள் கொழும்பிலும் நிம்மதியாகத் தங்கி இருக்க முடியவில்லை. சந்தேகப் பிராணிகளாக நோக்கப்பட்டு பலவித தொல்லைகளுக்கும் ஆளாக வேண்டியதாயிற்று. இளைஞர்கள் பலர் படையினரால் கைது செய்யப்பட்டு சித்திரவதைக்கு ஆளாவதும் சகஜமாகி விட்டது.

நிலவுக்கு அஞ்சி பரதேசம் போய் அங்கும் அல்லற்பட நேர்ந்தும் பலரும் வெளிநாடு ஒன்றே தஞ்சம், அதுவே தங்களை இரட்சிக்க வல்லது என்று வீண் கற்பனை செய்து கொண்டு வெளிநாட்டுப் பயண முகவர் நிலையங்களுக்கு அலைகிறார்கள்.

தங்களுக்குத் தெரிந்த பலர் வெளிநாடுகளுக்கெனச் சென்று திரும்பி வந்தது தெரிந்த பின்னரும், முகவர்களால் ஏமாற்றப்பட்டு சென்றடைந்த நாடுகளில் கைது செய்யப்பட்டது தெரிந்த பின்னரும் பலரும் வெளிநாட்டுப் பயணம் என்ற "போதை"யைக் கைவிட விரும்பவில்லை.

காற்றுள்ள போதே தூற்றிக் கொள்ளவேண்டும்; நாட்டில் குழப்ப நிலை இருக்கும் போதே வெளிநாடு சென்று விடவேண்டும் என நினைத்துப் பலரும் பணத்தைச் சுளை சுளையாக இழப்பதும் அல்லாமல் அந்நிய நாடுகளில் அநாதைகளாகிறார்கள்! இவர்கள் பாவங்கள்! ஏன் இவர்களுக்கு இந்த மயக்கமோ?

இத்தகைய மானம் கெட்ட, அலங்கோல வாழ்க்கை தேவைதானா? பட்டினி கிடந்தாலும், செத்துமடிந்தாலும் தாய் மண்ணிலேயே சொந்த மக்களுடன் சேர்ந்து மாள்வோம் என்று எண்ணின் இந்தக் கதி ஏற்படாதே! சொந்த மண்ணை நேசிக்காமல், தங்கள் சுயநலத்தையே நோக்குபவர்களுக்கு கிடைக்கும் பரிசு இன்னலே.

வெளிநாட்டில் போய் அனாதைகளாகச் சீரழிவதை விட, இந்த மண்ணின் விடிவுக்காகப் போராடி உயிரிழப்பது மேல்.

இதனை எமது இளைஞர்கள் உணருவது எப்போது?

### அவசர அனுமதி இடைநிறுத்தம்

யாழ்ப்பாணம், ஜூலை 13

பயணிகளுக்கு அவசர அனுமதி வழங்குவது மறு அறிவித்தல் வரை ரத்துச் செய்யப்பட்டுள்ளதாக நேற்று அறிவிக்கப்பட்டது.

வலிகாமம் பிரிவில் சங்கானை, உரும்பராய் அலுவலகங்களில் அவசர அனுமதிக்காக விண்ணப்பித்து இதுவரை அனுமதி கிடைக்காதோர் முறையே இன்றும், நாளையும் தத்தமது காரியாலயங்களுக்குச் சமுகம் தருமாறு கேட்கப்பட்டுள்ளனர். [ஒ]

### கொக்குவில் இந்துக் கல்லூரி மாணவருக்கு

யாழ்ப்பாணம், ஜூலை 13

1990, 91, 92 பரீட்சைக்குத் தோற்றவிருக்கும் மாணவர்களையும், புதிய உயர் தர வகுப்பில் சேர்ந்துள்ள மாணவர்களையும், கல்லூரி ஆசிரியர்களையும் இன்று காலை கல்லூரியில் சமுகம் அளிக்கும்படி கொக்குவில் இந்துக் கல்லூரி அதிபர் கோரியுள்ளார். [இ]

### ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 13

யாழ். தொழில்நுட்பக் கல்லூரியில் இன்று 13 ஆம் திகதி நடைபெறவிருந்த வரவேற்பு உபசார வைபவம் தவிர்க்க முடியாத காரணங்களினால் ஒத்திவைக்கப்பட்டுள்ளது. [இ]

### சனசமூக நிலைய கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், ஜூலை 13

யாழ். மாநகரசபைப் பிரதேசத்துக்குள்ளும், நல்லூர் பிரதேசசபை எல்லைக்குள்ளும் உள்ள சகல சனசமூக நிலையங்களினதும் நிர்வாக சபை உறுப்பினாகள் கலந்து கொள்ளும் கூட்டம் ஒன்று, இன்று 13 ஆம் திகதி பிற்பகல் 2.30 மணிக்கு யாழ். இந்துக் கல்லூரியில் நடைபெறுகிறது.

யாழ். பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திரு. சுந்தரம் டிவகலாலா இது பற்றி அறிவித்துள்ளார். (இ)

### ஸ்ரீ கதிரமலை சிவன் கோவிலில்

மயிலணி ஜூலை 13

சுன்னாகம் ஸ்ரீ கதிரமலைச் சிவன் தேவஸ்தானத்தில் இன்று சனிக்கிழமை காலை சங்காபிஷேகமும், மாலை திருக்கலியாணமும் நடைபெறும்.

இதனைத் தொடர்ந்து கம்பன் கழகச்செயலர்ளர் திரு. ஜெயராஜ் தலைமையில் பட்டிமன்றமும் இடம்பெறும். (இ-89)

### இடம்பெயர்ந்த குடும்பங்களுக்கு உதவி

யாழ்ப்பாணம், ஜூலை 13

வல்வெட்டித்துறையில் இடம்பெற்ற இராணுவ நடவடிக்கைகளினால் பாதிக்கப்பட்ட இடம்பெயர்ந்த குடும்பங்களுக்கு யாழ். மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையம் பல்வேறு வகையான நிவாரணப் பொருள்களை அனுப்பிவைத்துள்ளது.

வல்வெட்டித்துறையில் சேதமடைந்த வீடுகளைத் திருத்துவதற்கும் உதவிப் பொருள்கள் வழங்கப்பட்டன.

அத்துடன் ஊர்காவற்றுறை துயர் துடைப்பு சங்கத்துக்கும் ரூபா ஒரு லட்சத்து 25 ஆயிரம் பெறுமதி மிக்க பாடசாலை உபகரணங்கள், துணி வகைகள், சமையல் பாத்திரங்கள் [illegible] பனவும் இணையத்தினால் வழங்கப்பட்டன. [த]

## ஈராக் தாக்கப்படும்; ஜனாதிபதி புஷ் எச்சரிக்கை

லண்டன், ஜூலை 13

ஈராக்கின் இராணுவத் தளபாட நிலைகளை ஐக்கிய நாடுகள் கண்காணிப்புக் குழுவினர் பார்வையிட ஜனாதிபதி சதாம் ஹுசேன் அனுமதி அளிக்காவிட்டால் மீண்டும் ஈராக் மீது தாக்குதல் நடத்தவேண்டி வரும் என்று அமெரிக்க அதிபர் ஜோர்ஜ் புஷ் நேற்று எச்சரித்தார்.

ஐ. நா. சமாதான உடன்படிக்கையில் உள்ள நிபந்தனைகளில் ஈராக் தனது இராணுவத் தளபாட நிலைகளை ஐ. நா. கண்காணிப்புக் குழுவினர் பார்வையிட அனுமதிக்க வேண்டும் என்பதும் அடங்கியுள்ளது.

கடந்த திங்கள், செவ்வாய்க்கிழமைகளில் மேற்படி குழுவினர் ஈராக்கின் இராணுவத் தளபாட நிலைகளைப் பார்வையிடச் சென்றபோது அனுமதி மறுக்கப்பட்டுள்ளது.

இதனை அடுத்தே ஜோர்ஜ் புஷ் இந்த எச்சரிக்கையை விடுத்துள்ளார். (ஒ-5)

## சாத்தானின் கவிதைகள்; மொழிபெயர்த்தவர் பலி!

டோக்கியோ, ஜூலை 13

சல்மான் ருஷ்டியின் "சாத்தானின் கவிதைகள்" நூலை ஜப்பானிய மொழியில் மொழிபெயர்த்த 44 வயதான ஹித்தாச்சி இகாரிஷி நேற்று இனந்தெரியாதவர்களால் கத்தியால் குத்திக் கொல்லப்பட்டார்.

டோக்கியோவில் அவர் பணிபுரிந்து வந்த பல்கலைக்கழக வளவில் அவரது சடலம் கண்டுபிடிக்கப்பட்டது.

"சாத்தானின் கவிதைகள்" நூலை ஜப்பானிய மொழியில் மொழிபெயர்த்ததற்காக அவர் கொல்லப்பட்டாரா அல்லது வேறுகாரணங்களுக்காக கொல்லப்பட்டாரா என்பது தெரியவில்லை என பொலீஸார் தெரிவித்தனர். [உ-எ]

## சிவகாசி அதிர்ந்தது! வெடிவிபத்தில் 33 பேர் பலி!!

சென்னை, ஜூலை 13

சிவகாசி—மீனம்பட்டி என்னுமிடத்தில் உள்ள பட்டாசுத் தொழிற்சாலையில் நேற்றுக் காலை 11 மணியளவில் ஏற்பட்ட வெடி விபத்தில் 33 பேர் கருகி பலியானார்கள். அவர்களில் பெரும்பாலோர் குழந்தைகள் என்று தெரிவிக்கப்பட்டது.

சக்கரவெடி ஒன்றைப் பரிசோதனை செய்த போது திடீரென்று தீபிடித்துக் கொண்டது. அதைத் தொடர்ந்து ஏற்பட்ட வெடிவிபத்தினால் சிவகாசி நகரமே அதிர்ந்ததாகச் சொல்லப்பட்டது.

இது ஒரு விபத்தே என்று பொலீஸார் தெரிவித்தனர். (உ-எ)

## ராஜீவ் கொலை விசாரிக்க விசேட நீதிமன்றம்

சென்னை, ஜூலை 13

ராஜீவ் காந்தி கொலை பற்றிய வழக்கை விசாரணை செய்ய பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் சென்னை நகரில் விசேட நீதிமன்றம் ஒன்று அமைக்கப்பட்டது.

முதலாவது கூடுதல் செஷன்ஸ் நீதிபதி எஸ். எம். சித்திக் இந்த நீதிமன்றத்தின் நீதிபதியாக நியமிக்கப்பட்டிருக்கிறார்.

இது தொடாபான அறிவித்தல், தமிழக அரசினால் நேற்று முன்தினம் வெளியிடப்பட்டது.

இதன் காரணமாக ராஜீவ் காந்தி கொலை வழக்கை இந்த விசேட நீதிமன்றத்திற்கு மாற்றுமாறு செங்கல்பட்டு நீதிவான் முன்னிலையில் மனு ஒன்றை மத்திய புலனாய்வுத்துறை நேற்று தாக்கல் செய்தது.

மனுவை செங்கல்பட்டு நீதிவான வடிவேல் இரத்தினம் ஏற்றுக்கொண்டார். (உ-எ)

## காங்கிரஸ் அரசின் நம்பிக்கை வாக்கெடுப்பு திங்களன்று நடைபெறும்

புதுடில்லி, ஜூலை 13

காங்கிரஸ் அரசின் நம்பிக்கை கோரும் பிரேரணை மீதான வாக்கெடுப்பு எதிர்வரும் திங்கட்கிழமை லோக சபையில் இடம்பெறும்.

இப் பிரேரணை பிரதமர் நரசிம்மராவினால் நேற்று லோகசபையில் சமர்ப்பிக்கப்பட்டது. அதன் மீதான விவாதத்தை எதிர்க்கட்சித் தலைவர் எல். கே. அத்வானி (பாரதீய ஜனதா) தொடக்கி வைத்தார்.

நம்பிக்கை கோரும் பிரேரணையை எதிர்த்து வாக்களிக்கப்போவதாக பாரதீய ஜனதா கட்சியும் ஜனதாதள் கட்சியும் அறிவித்துள்ளன.

பிரேரணையை ஆதரித்து வாக்களிக்கப் போவதாக அகில இந்திய முஸ்லிம் லீக் அறிவித்துள்ளது. (ஒ-எ)

## மூன்று மாதங்களுக்கு மேல் வெளிநாட்டில் தங்கியோர் வாகனம் இறக்க அனுமதி

வெளிநாடுகளில் மூன்று மாதங்களுக்கு மேல் தங்கியிருக்கும் இலங்கையர் வாகனம் ஒன்றை இறக்குமதி செய்வதற்கு அனுமதிப்பத்திரம் வழங்கப்படும்.

சம்பாதிக்கப்படும் வெளி [illegible] அனுமதிப்பத்திரத்தில் வெளிநாட்டு நாணய மாற்று சம்பாதிப்பையும் சேமிப்பையும் உறுதிப்படுத்துவதற்கு திருப்திகரமான ஆதாரங்களை இவர்கள் சமர்ப்பிக்க வேண்டும்,

இது தொர்டர்பாக வர்த்தக - வாணிப அமைச்சர் ஏ. ஆர். மன்சூர் சமர்ப்பித்த யோசனையை அமைச்சரவை ஏற்றுக் கொண்டது. (உ-எ]

## இரவில் பகல்!

தாளையடி, ஜூலை 13

ஆனையிறவு இராணுவ முகாமைச் சூழவுள்ள சுமார் பத்து மைல் தொலைவில் உள்ள பகுதிகளில் கடந்த செவ்வாய்க்கிழமை இரவுக்குப் பின்னர் இரவு தெரியவில்லை. எழுபத்திரண்டு மணித்தியாலங்கள் ஒரே தொடர்ச்சியாகப் பகலாகவே இருக்கிறது.

பளை, தாளையடி, பச்சிலைப்பள்ளி, இயக்கச்சி உட்பட்ட பல கிராமங்களில் இவ்வாறு பகலாகத் தெரிந்ததால் மூன்று இரவுகள் வரவில்லை என்று நினைக்காதீர்கள்! இரவுகள் வழமைபோல் வந்தன. ஆனால் ஆனையிறவு முகாமில் நடந்து வரும போரின் பொருட்டு ஏவப்பட்ட "பரா" வெளிச்சங்களால் இரவும் பகலாகியது!!

இருட்டுக் காலமான இவ்வேளையிலும் கடந்த மூன்று இரவுகளும சம்பந்தப்பட்ட பகுதிகள் எங்கும் ஒளி வெள்ளமாய்க் காணப்பட்டன. இரவு என்ற உணர்வே இருக்கவில்லை. அந்தளவுக்கு ஒன்றன்பின் ஒன்றாக மாறி மாறி "பரா" வெளிச்சக் குண்டுகள் வானத்துக்கு ஒளியூட்டின.

அவற்றுக்குப் போட்டியாக இருதரப்பு ஷெல்களும் வெடித்து காதைப் பிளந்தன. (அ-144)

### அனுமதிப்பத்திரம் பெறவேண்டுமாம்

கொழும்பு, ஜூலை 13

வெளியிடங்களில் இருந்து வவுனியா வருபவர்கள், வவுனியாவில் தங்கி நிற்க அங்குள்ள பாதுகாப்பு அதிகாரிகளிடமிருந்து அனுமதிப்பத்திரம் பெறவேண்டுமாம்.

இப்படி கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

### ஆனையிறவில்...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

மூன்று] பகல் முழுவதும் படையினரின் விமான மற்றும் ஷெல் தாக்குதல்கள் இடம்பெற்றன.

அன்று மாலையில் முகாமின் வடக்குப்புறத்தில் குறிஞ்சாத்தீவுப் பக்கமாக [தடை முகாம் பக்கமாக] உள்ள காவல் தளத்தின் மீது அதிரடித் தாக்குதல் ஒன்றை புலிகள் தொடுத்தனர்.

பெரிய அளவில் காவல் தளத்தைக் கைப்பற்ற புலிகள் முயற்சித்தபோதும் வியாழன் இரவு நடத்தப்பட்ட தாக்குதல் புலிகளுக்கு பூரண வெற்றியைத் தரவில்லை என்று தெரிவிக்கப்படுகிறது.

தொடர்ந்து நேற்றிரவு இப்பகுதியில் மீண்டும் புலிகள் தாக்குதலைத் தொடுத்திருந்தனர்.

நேற்றிரவு தாக்குதல் தொடர்பான விவரங்கள் செய்தி அச்சுக்குப் போகும் வரை கிடைக்கவில்லை.

நேற்றுப் பகலும் இரவும் தொடர்ந்து ஹெலிகள், அவ்ரோக்கள் மற்றும் பொம்மர்கள் முகாம் பகுதியில் தாக்குதல் நடத்தின.

எனினும் கடும் தாக்குதலுக்கு மத்தியிலும் புலிகளின் போராளிகள் முகாமை நெருக்கிப் பிடித்து காவல் தளத்தை வீழ்த்தும் தாக்குதல் முயற்சியில் நேற்றிரவு வரை மிக முனைப்புடன் ஈடுபட்டிருந்தனர்.

புலிகளின் தாக்குதலினால் பிரதான முகாமின் பல காவலரண்கள் கடும் சேதமடைந்திருப்பதாகத் தெரிய வருகிறது.

நேற்றுப் பகல் ஹெலிக்கொப்டர்கள் முகாமிற்குள் தரையிறங்கும் முயற்சியாக முகாமிற்கு மேல் வட்டமிட்டன என்றும்—

ஆனால் புலிகளின் சளைக்காத தாக்குதலினால் ஹெலிகள் கீழே இறங்க முடியவில்லை என்றும் கூறப்படுகிறது. [உ-15-3-5]

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# அரசு ராணுவத் தீர்வையே இன்னமும் நாடுகின்றது!

## பி. பி. ஸிக்கு யோகி பேட்டி

லண்டன், ஜூலை 13
ஸ்ரீலங்கா அரசாங்கம் இராணுவத் தீர்வையே விரும்புகிறது என்பதனையே அதன் நடவடிக்கைகள் மூலம் அறியமுடிகிறது.

இவ்வாறு விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் செயலாளர் நாயகம் திரு. யோகரத்தினம் யோகி பி. பி. ஸிக்கு அளித்த பேட்டியில் தெரிவித்தார்.

கடந்த வாரம் யாழ்ப்பாணம் வந்திருந்த பி. பி. ஸி. செய்தியாளருக்கு அவர் அளித்த பேட்டியில் மேலும் தெரிவித்திருப்பதாவது;—

நிபந்தனையற்ற முறையில் பேச்சுவார்த்தை நடத்துவதற்கு நாம் தயாராக இருக்கிறோம் என்று ஸ்ரீலங்கா அரசுக்கு நாம் தெரிவித்து வருகிறோம்.

ஆனால் ஸ்ரீலங்கா அரசு நேரத்துக்கு நேரம் புதிது புதிதாக வேறுபட்ட நிபந்தனைகளை விதித்து வருகிறது. தமிழர் பிரச்சினைக்கு அரசு இராணுவத் தீர்வையே விரும்புகிறது என்பதையே இதிலிருந்து அறிய முடிகிறது.

தமிழகத்தில் விடுதலைப் புலிகளுக்கு எதிராகப் பிரசாரங்கள் செய்யப்படுவது கவலைக்குரியது. எங்களுக்கு எதிராக வேண்டாத குற்றச்சாட்டுக்களும் சுமத்தப்படுகின்றன.

நாம் இந்தியாவுக்கு எதிரானவர்கள் அல்லர் என்பதை வெகு தெளிவாக கூறி வந்துள்ளோம். எமது போராட்டத்துக்கு தமிழக மக்கள் என்றும் ஆதரவாகவே இருந்துள்ளனர்.

அ. தி. மு. க. தலைவர் திரு. எம். ஜி. இராமச்சந்திரன் எப்போதும் எங்களுக்கு ஆதரவாகவும் துணையாகவும் இருந்தார். அதே போல, இப்போதைய முதலமைச்சர் செல்வி ஜெயலலிதாவும் எமது போராட்டத்துக்கும் மக்களுக்கும் ஆதரவாக இருப்பார் என்று எதிர்பார்க்கிறோம்— என்றார். [அ-3]

### ராஜீவ்காந்தி கொலைச் சம்பவம்:

## சி. பி. ஐ. புலன் விசாரணையில் வாழப்பாடி தலையீடு உண்டா?

சென்னை, ஜூலை 13
ராஜீவ்காந்தியின் கொலை விசாரணை நடைபெறும் சி. பி. ஐ. (மத்திய புலனாய்வுப் பிரிவு) அலுவலகமான மல்லிகை இல்லத்துக்கு தமிழ்நாடு காங்கிரஸ் தலைவர் திரு. வாழப்பாடி இராமமூர்த்தி அடிக்கடி சென்று வருகிறார் என சென்னைப் பத்திரிகைச் செய்திகள் தெரிவிக்கின்றன.

ராஜீவ் கொலை தொடர்பாகக் கைது செய்யப்பட்ட தாதி பத்மா, அவரது மகன் பாக்கியநாதன் ஆகியோரின் வாக்குமூலங்களை சி. பி. ஐ. அதிகாரிகள் பதிவு செய்து கொண்டிருந்த அன்று மாலை வாழப்பாடி இராமமூர்த்தி தனது காரில் அங்கு வந்தார் என்றும் —

வாழப்பாடியின் உதவியாளர், கையில் ஒரு கடிதத்துடன், மல்லிகை இல்லத்திலுள்ள சி. பி ஐ. அதிகாரிகளின் அறைக்குச் சென்று அதைக் கொடுத்து விட்டு சிரித்த முகத்துடன் திரும்பி வந்தார் என்றும்—

பின்னர் வாழப்பாடியிடம் ஏதோ பேசிய பின் கார் புறப்பட்டுச் சென்றது எனறும்—கூறப்படுகிறது.

இதற்கு மறுநாள் மாலையும் வாழப்பாடியின் கார் மீண்டும் மல்லிகை இல்லத்துக்கு வந்தது. காரில் வாழப்பாடி இருக்கவில்லை. ஆனால் அவரின் சாரதி நாச்சியப்பன், வாழப்பாடியின் உதவியாயர் அவரின் பாதுகாவலர் ஆகியவர்களுடன் 25 வயது மதிக்கத்தக்க இளைஞர் ஒருவரும் இருந்தார்,

காரை விட்டு அவசரமாக இறங்கிய வாழப்பாடியின் உதவியாளர் காரில் இருந்த இளைஞரை காரை விட்டு இறங்கும்படி துரிதப்படுத்தினார். பின்பு அவரை சாரதி சகிதம் அழைத்துக்கொண்டு மல்லிகை இல்லத்துக்குள் நுழைந்தார். அவர்களை வாழப்பாடியின் பாதுகாவலர் பின்தொடர்ந்தார்.

செய்தியாளர் உட்பட எவரையுமே உள்ளே அனுமதிக்காத மல்லிகை இல்ல பாதுகாப்பு அதிகாரிகள், இவர்களை தங்கு தடையின்றி உள்ளே செல்ல அனுமதித்தனர்.

பின்னர் அந்த இளைஞரைத் தவிர மற்ற மூவரும் வெளியில் வந்து தாங்கள் வந்த காரில் ஏறிச் சென்றனர்.

முதல் நாள் வந்த வாழப்பாடி மல்லிகை இல்லத்துக்கு கடிதத்தை கொடுத்தனுப்பியது ஏன்? அடுத்த நாள் வாலிபர் ஒருவரைக் கொண்டு சென்று ஒப்படைத்தது ஏன்? வாழப்பாடி விசாரணைகளில் தலையிடுகின்றாரா? என்றெல்லாம் சென்னைப் பத்திரிகைகள் சந்தேகக் குரல் எழுப்பியிள்ளன. (த)

## வீதிப் போக்குவரத்துக்கு இடையூறு செய்யாதீர்!

### காவல்துறை அறிக்கை

யாழ்ப்பாணம், ஜூலை 13
வீதிப்போக்குவரத்துத் தடைகளை ஏற்படுத்த வேண்டாம் என தமிழீழ காவல் துறை போக்குவரத்துப் பிரிவு வேண்டுகோள் விடுத்துள்ளது.

இது தொடர்பாக தமிழீழ காவல் துறைப்பொறுப்பாளர் விடுத்த அறிக்கை வருமாறு:

இன்றைய யுத்தகால சூழ்நிலையைக் கருத்தில் கொண்டு யாழ். நகரின் கண்டி வீதி, ஆஸ்பத்திரி வீதிகளில் பொதுமக்கள் தேவையில்லாமல் கூட்டம் கூட்டமாக செல்வதும், சைக்கிள்களில் செல்வதும் தவிர்க்கப்பட வேண்டும்.

இக்கால கட்டத்தின் அவசியத்தை மனதில் கொண்டு நகரின் ஏனைய வீதிகளைக் கூட அவசியமில்லாது பயன்படுத்த வேண்டாம். வீதிகளில் வாகனங்கள் எந்த நேரமும் அதி வேகமாக வரலாம். இந்த நிலையில் நாம் வீதிகளில் அவசியமற்று நடமாடுவதன் மூலம் வீதித் தடைகள் ஏற்படுத்துவதற்கு உடந்தையாக உள்ளோம். இவ்வாறான சந்தர்ப்பங்களில் தான் வீதி விபத்துக்கள் ஏற்படுகின்றன. வீதி விபத்து ஒன்று ஏற்படுமானால் தனி ஒருவர் மட்டுமன்றி பலரின் உயிர்கள் பலியாவதற்கு நாம் உடந்தையாவோம்.

இன்றைய காலகட்டதின் அவசியத்தை உணர்ந்து நகரின் பிரதான வீதிகளில் வீதிப் போக்குவரத்தைக் கட்டுப்படுத்தும் நோக்குடன் தமிழீழ காவல் துறையின் போக்குவரத்துப் பிரிவினர், மற்றும் தொண்டர் படையினர் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளார்கள். காலத்தின் தேவையைக் கருத்திற் கொண்டு உங்கள் ஒத்துழைப்பைத் தந்துதவுமாறு தமிழீழ காவல் துறையினர் பொது மக்களை மிகவும் பணிவுடன் கேட்டுக்கொள்கின்றனர்.

இப்படி அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. [இ]

## மீட்கப்பட்ட ஆயுதங்கள்..

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

| | |
|---|---|
| ★ 60 எம். எம். மோட்டார் | — 03 |
| ★ ஷெல் | — 40 |
| ★ பராலைட் ஷெல் | — 11 |
| ★ பூஸ்டர் | — 160 |
| ★ 2 அங்குல மோட்டார் | — 01 |
| ★ ரி – 81 ரக ரைபிள் | — 01 |
| ★ அதற்குரிய கிரனேட் | — 46 |
| ★ ரி 56 – 1 ரக ரைபிள் | — 02 |
| ★ ஏ. கே. மகஸின் | — 15 |
| ★ ரி 56 - 2 ரக ரைபிள் | — 02 |
| ★ ரி 56 புதிய ரக ரைபிள் | — 01 |
| ★ ஆர். ஸி. எல். ஸ்ராண்ட் | — 01 |
| ★ இரவுப் பார்வைக் கண்ணாடி | — 01 |
| ★ ஐ. எம். ரவை | —37,000 |
| ★ ஐ, எம். லிங்குடன் ரவை | — 1,000 |
| ★ நேட்டோர் ரவை (லிங்குடன்) | —12,500 |
| ★ 303 ரக ரவை | — 600 |
| ★ பரா லைட் | — 41 |
| ★ ஜே. ஆர். ரக கிரனேட் | — 131 |
| ★ ரி. என். ரி.கிரனேட் | — 43 |
| ★ புகைக் குண்டு | — 01 |
| ★ கிளைமோர் (பெரிது) | — 08 |
| ★ கிளைமோர் (சிறிது) | — 03 |

(உ-3)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்பிளிகேசன் (பிறைவேட்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2 இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 13-07-1991 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

## கொழும்பில் குண்டுப் புரளி; 1,500 பேர் அலறி ஓடினர்!

கொழும்பு, ஜூலை 13
கொழும்பு இராணுவத் தலைமைக் கட்டடத்திற்கு நேர் எதிரே அமைந்திருக்கும் 14 மாடிக் கட்டடத்தில் குண்டுகள் வைக்கப்பட்டுள்ளன எனத் தொடர்ந்து மூன்று தொலைபேசி அழைப்புகள் கிடைத்தன.

அதை அடுத்து, அக்கட்டடத்தில் உள்ள சுமார் ஆயிரத்து 500 பேர் அலறி அடித்துக்கொண்டு வெளியேறி ஓடினர்.

இவர்களை வெளியேற்றும் பணியில் இராணுவம் உதவியது.

அதன் பின்னர் இராணுவத்தினர் அக்கட்டடத்தின் மூலை முடுக்கு எங்கும் தீவிர தேடுதலில் ஈடுபட்டனர். அங்கு குண்டுகள் ஏதும் இருக்கவில்லை.

இது விஷமிகளின் ஏமாற்றும் ''புரளி'' என்று பின்னர் தெரியவந்தது. (ஒ-எ)

## ஊர்காவற்றுறை ராணுவம் இரவில் கடும் ஷெல் தாக்கு

### யாழ். நகரமும் அதிர்ந்தது

ஊர்காவற்றுறை இராணுவ முகாமில் இருந்து நேற்றிரவு 10 மணி தொடக்கம் தொடர்ச்சியான கடும் ஷெல் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டன.

அதேசமயம் காரைநகர கடற் பகுதியில் இருந்தும் பீரங்கித் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டன.

நேற்றிரவு இரு பகுதிகளில் இருந்தும் நூற்றுக்கும் மேற்பட்ட ஷெல், பீரங்கிக் குண்டுகள் குடியிருப்புப் பகுதிகளை நோக்கி ஏவப்பட்டன.

ஷெல், பீரங்கிக் குண்டுகளின் சத்தத்தால் யாழ். நகரமும் அதிர்ந்தது,

சேதங்கள் குறித்து இச் செய்தி எழுதும் வரை விவரங்கள் ஏதும் கிடைக்கவில்லை. [ஒ-15]

## நேற்றும் திருநாவுக்கரசு வெளியேற்றப்பட்டார்

சென்னை, ஜூலை 13
அண்ணா—புரட்சித் தலைவர் தமிழக முன்னேற்றக் கழக எம். எல். ஏ யான எஸ். திருநாவுக்கரசு மூன்றாவது நாளாக நேற்றும் தமிழ்நாடு சட்டசபைக் கூட்டத்தில் இருந்து சபாநாயகரால் வெளியேற்றப்பட்டார்.

சபையின் கண்ணியத்திற்கு குறைவாக நடந்து கொண்டார் என்று கூறி சபாநாயகர் சபையில் இருந்து வெளியேறும்படி திருநாவுக்கரசுக்கு உத்தரவிட்டார். (உ-எ)

### காயமுற்ற..

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

கிப் பிடித்திருக்கிறார்கள் என்பதும்—

இதனால் காயமுற்ற சிப்பாய்களை மீட்க முடியாத நிலையில் ஸ்ரீலங்காப் படைகள் உள்ளன என்பதும் தெரிந்ததே. (உ-எ3-)

## மரண அறிவித்தல்கள்

### திருமதி ஆச்சிமுத்து வினாசித்தம்பி

சரவணையைச் சேர்ந்த திருமதி ஆச்சிமுத்து வினாசித்தம்பி 10-07-1991 அன்று புதன்கிழமை கொழும்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற தீவுப்பகுதி பிரசித்த நொத்தாரிசு கா. வினாசித்தம்பியின் அன்பு மனைவியும், திருமதி பாக்கியம் தெய்வேந்திரம் [ஓய்வு பெற்ற ஆசிரியை], காசிப்பிள்ளை, பொன்னுத்துரை [ஓய்வு பெற்ற அதிபர், மானிப்பாய் மெமோறியல் கல்லூரி], காலஞ்சென்ற பாலசிங்கம், நடராசா [கணக்காளர், கனடா] ஆகியோரின் அருமைத் தாயாரும். அ. தெய்வேந்திரம் [ஓய்வு பெற்ற மொழி பெயர்ப்பாளர், சுகாதாரப்பகுதி], பூரணம் மகேஸ்வரி, பவா, இந்திராணி B.A. Hons [கனடா] ஆகியோரின் அன்புமாமியாரும், காலஞ்சென்ற வேலாயுதபிள்ளை [சின்னத்துரை, P. M], மனோன்மணி, மங்களாம்பிகை ஆகியோரின் சிறிய தாயாருமாவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் கொழும்பில் வியாழக்கிழமை [11-7-1991] அன்று நடைபெற்றன. உற்றார், உறவினர்கள், நண்பர்கள் இவ்வறிவித்தலை தயவு செய்து ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்;
கா. யோகராசா
[பேரன்]

சரவணை கிழக்கு.
வேலணை.

[17514]

### இராச இரத்தினம் நேசமணி

(சங்கீத ஆசிரியை)

திருகோணமலையைப் பிறப்பிடமாகவும், சிறுப்பிட்டியை வதிவிடமாகவும் கொண்ட திருமதி இராச இரத்தினம் நேசமணி [சங்கீத ஆசிரியை, அச்சுவேலி மகாவித்தியாலயம்] 12-07-91 இல் காலமானார். இவர் திரு. எஸ். இராசஇரத்தினத்தின் [சவூதி அரேபியா] அன்பு மனைவியும், அன்பழகன் [யாழ். பல்கலைக் கழகம்], மதியழகன் [பேராதனை பல்கலைக்கழகம்], ஜெசி [கனடா], அசந்தினா [சசி], [அச்சுவேலி, சென்ற் திறேசா மாணவி], வினோதராஜன் [ஜிம்போ], லதாங்கி [அச்சுவேலி, மகாவித்தியாலய மாணவர்] ஆகியோரின் அன்புத் தாயாருமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் 12 - 07 – 91இல் சிறுப்பிட்டியில் நடைபெற்றன. இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
அசந்தினா (சசி)

சிறுப்பிட்டி,
நீர்வேலி.

(17515)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org